# முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
# முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி.
# HMOP. No.37/2025

ம.சா.1 தேதி.12.03.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வநாதன் | த/பெ. | ராமலிங்கம் |
| வயது | 40 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

எனது பெற்றோர்களின் தூண்டுதலின் பேரில் தான் தனிக்குடித்தனம் நடத்த வேண்டுமென்று மனுதாரர் கட்டாயப்படுத்தினார் என்று எனது பிரமான வாக்குமூலத்தில் கூறியுள்ளது வழக்கிற்காக பொய்யாக கூறினேன் என்றால் சரிதான். என் மீது பாண்டிச்சேரி குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கானது மாறுதலாகி இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மனுதாரரும் நானும் உறவினர்கள் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் அனைவரது முன்னிலையிலும் சுமூகமாக பேசி இருவரும் சேர்ந்து வாழ வேண்டும் என்று முடிவெடுத்துள்ளோம். கடந்த 1-1/2 வருடமாக நானும் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். வழக்கினை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன் என்றால் சரிதான்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.

**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**HMOP. No.37/2025**

எ.ம.சா.1 தேதி.12.03.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுகந்தி | த/பெ. | ராஜேந்திரன் |
| வயது | 35 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

மனுதாரர் என்னிடம் வீண் பிரச்சனை செய்துக்கொண்டு பாண்டிச்சேரி நீதிமன்றத்தில் HMOP 480/2022 தாக்கல் செய்து மேற்படி வழக்கை உறவினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் சமரசம் பேசி மனுதாரர் என்னுடன் சேர்ந்து தான் வாழ வேண்டும் என்று கூறியதால் மனுதாரர் இந்த வழக்கினை வாபஸ் வாங்கிவிட்டார் என்றால் சரிதான். எதிர்மனுதாரரும் நானும் உறவினர்கள் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் அனைவரது முன்னிலையிலும் சுமூகமாக பேசி இருவரும் சேர்ந்து வாழ வேண்டும் என்று முடிவெடுத்துள்ளோம். கடந்த 1-1/2 வருடமாக நானும் மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்து வருகிறோம்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.